**<u>சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி</u>**

முன்னிலை: திரு. பி.எஸ். ரஸ்கின் ராஜ், பி.ஏ., எல்.எல்.பி.,
சார்பு நீதிபதி, உசிலம்பட்டி

2026-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 09-ம் நாள் வியாழக்கிழமை

**<u>அசல் வழக்கு எண்.228/2022 [CNR No.TNMD240004322022]</u>**

1) மணிமேகலை ... வாதி

// எதிரிடை//

1) வீரணன்
2) சின்ன வீரம்மாள் ... பிரதிவாதிகள்

இவ்வழக்கானது, என் முன்பாக கடந்த 01.04.2026-ம் தேதி, இறுதி விசாரணைக்காக வந்தபொழுது, வாதிக்காக கற்றறிந்த வழக்குரைஞர் திரு.S.கணபதி அவர்கள் ஆஜராகியும், 1-ம் பிரதிவாதிக்காக கற்றறிந்த வழக்குரைஞர் திரு.R.பன்னீர்செல்வம் அவர்கள் ஆஜராகியும், 2 பிரதிவாதிக்காக கற்றறிந்த வழக்குரைஞர் திரு.P.செல்வக்குமார் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், வழக்குரை, எதிர்வழக்குரை, மற்றும் இரு தரப்பு சாட்சியங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இது நாள் வரை, இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து, இன்று இந்நீதிமன்றம் பிறப்புவிக்கும்,

## தீர்ப்புரை:-

வாதியால் இவ்வழக்கானது, தாவா சொத்துக்களில் வாதிக்குரிய 1/3 பாகத்தினை பிரதிவாதிகள் நயமிடர் பிரித்து கொடுக்க முதல்நிலை தீர்ப்பாணை வழங்க கோரியும், பிரதிவாதிகளோ அவரது ஆட்களோ தாவா சொத்துக்களை பிரிக்கும் வரை எவ்வித வில்லங்கமும் ஏற்படுத்தக் கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், வழக்கின் செலவுத் தொகை கோரியும் வாதியால், பிரதிவாதிகள் மீது தாக்கல் செய்யப்பட்ட வழக்காகும்.

**2) வழக்குரைச்சுருக்கம்:-**

i) தாவா சொத்துக்கள் மதுரை மாவட்டம், கருக்கட்டான்பட்டி கிராமத்தில் அமைந்துள்ளது. வாதியின் பெற்றோர் பொன்னையாத்தேவர் மற்றும் கருத்தம்மாள் ஆவார்கள். திருமணத்தின் பயனாக மேற்படி தம்பதியினருக்கு 1-ம் பிரதிவாதி வீரணன், ஜெயராஜ், பால்பாண்டி, வாதி மணிமேகலை மற்றும் 2-ம் பிரதிவாதி சின்னவீரம்மாள் ஆகியோர்கள் வாரிசுகள் ஆவார்கள். பொன்னையாத்தேவரின் மகன்களான ஜெயராஜ் மற்றும் பால்பாண்டி ஆகியோர்கள் வாரிசுகளின்றி காலமாகிவிட்டார்கள். தாவா சொத்துக்கள் ஏ, பி மற்றும் சி அட்டவணைகளாக காட்டப்பட்டுள்ளது. ஏ அட்டவணை சொத்துக்கள் ஆதியில் பொன்னையாத்தேவருக்கு பாத்தியப்பட்டதாகும். பி அட்டவணை சொத்துக்கள் ஆதியில் கருத்தம்மாளுக்கு பாத்தியப்பட்டதாகும். மேற்படி பி அட்டவணை சொத்தைப் பொறுத்து 10(1) சிட்டா கருத்தம்மாள் பெயரில் உள்ளது. மேற்படி பூர்வீக சொத்துக்களிலிருந்து வந்த

வருமானத்தை வைத்து மீதமுள்ள ஏ அட்டவணை சொத்துக்களும், மேலும், பி மற்றும் சி அட்டவணை சொத்துக்களும் பொன்னையாத்தேவர் மற்றும் அவரது மனைவி கருத்தம்மாள் ஆகியோர்களால் கிரையம் பெறப்பட்டுள்ளது. தாவா சி அட்டவணை சொத்துக்கள் பணம் மற்றும் நகைகள் வாதியின் பெற்றோருக்கு பாத்தியப்பட்டதாகும். மேற்படி பொன்னையாத்தேவர் மற்றும் அவர் மனைவி கருத்தம்மாள் ஆகியோர்கள் தாவா சொத்துக்களை உடைமை பெற்று அனுபவம் செய்து வந்துள்ளார்கள். மேற்படி பொன்னையாத்தேவர் மேற்படி சொத்துக்களைப் பொறுத்து எந்த ஆவணமும் ஏற்படுத்தாமல் இறந்துவிட்டார். பின்னர் தாவா சொத்துக்களை அவரது வாரிசுகள் கூட்டாக அனுபவம் செய்து வந்துள்ளார்கள். இந்நிலையில் கருத்தம்மாள் 03.01.2021 அன்று காலமாகிவிட்டார். கருத்தம்மாளின் இறப்பிற்கு பிறகு வாதியும், பிரதிவாதிகளும் கூட்டாக அனுபவம் செய்து வந்துள்ளார்கள்.

ii) அடுத்ததாக, தாவா ஏ அட்டவணை சொத்துக்களை 1–ம் பிரதிவாதி அவரது பெயருக்கு பட்டா மாற்றியுள்ளார். மேற்படி பட்டா செல்லத்தக்கதல்ல. வாதிக்கு தாவா சொத்துக்களில் 1/3 பாகம் உரிமை உள்ளது. இதுசம்பந்தமாக, வாதி 1–ம் பிரதிவாதிக்கு கடந்த 15.09. 2022–ம் தேதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார். மேற்படி அறிவிப்பை 1–ம் பிரதிவாதி பெற்றுக்கொள்ளாமல் திருப்பி அனுப்பிவிட்டார். எனவே, தாவா சொத்துக்களில் வாதிக்குரிய 1/3 பாகத்தை பிரித்து தரக் கோரியும், வாதி பாகத்தில் பிரதிவாதிகள் எவ்வித இடையூறும் செய்யக் கூடாது என

நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வாதியால் தாக்கல் செய்யப்பட்ட வழக்காகும்.

**3) 1 பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரைச் சுருக்கம்:–**

i) தாவா வழக்கு நிலைக்கத்தக்கதல்ல. உண்மையில் 1–ம் பிரதிவாதியின் பெற்றோர்கள் தாவா ஏ மற்றும் பி செட்டியூல் சொத்துக்களை 1–ம் பிரதிவாதிக்கு வாய்மொழி தானம் கொடுத்துள்ளார்கள். மேற்படி வாய்மொழி தானத்திற்கு பிறகு தாவா ஏ மற்றும் பி அட்டவணை சொத்துக்களை 1–ம் பிரதிவாதி முழு உரிமை பெற்று அனுபவம் செய்து வந்துள்ளார். 1–ம் பிரதிவாதியின் பெற்றோர்கள் அவர்களது பெண் பிள்ளைகளுக்கு நல்ல முறையில் சீர் வரிசை செய்து திருமணம் செய்து வைத்துள்ளார்கள். அவர்கள் காலத்திற்கு பிறகு 1–ம் பிரதிவாதியும் வாதி மற்றும் 2–ம் பிரதிவாதியான 1–ம் பிரதிவாதியின் சகோதரிகளுக்கு அனைத்து சீர்வரிசைகளும் செய்துள்ளார். தாவா ஏ மற்றும் பி அட்டவணை சொத்துக்கள் அனுபவம் மற்றும் உரிமையின் அடிப்படையில் 1–ம் பிரதிவாதி பெயருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது.

ii) அடுத்ததாக, 1–ம் பிரதிவாதிக்கு அவரது பெற்றோர்கள் வாய்மொழி தானம் கொடுத்தது வாதிக்கு நன்கு தெரியும். வாதி ஒருபோதும் பிரதிவாதிகளுடன் சேர்ந்து தாவா சொத்துக்களை அனுபவம் செய்யவில்லை. வாதி செலுத்திய நீதிமன்ற கட்டணம் தவறானது ஆகும். எனவே, வாதிக்கு தாவா சொத்துக்களில் எந்த பாகமும் கிடைக்கத்தக்கதல்ல. வாதியின் தாயார் கருத்தம்மாள் இறந்த பிறகு

அவரது நகைகள் மற்றும் பணம் ஆகியவற்றை அவரது பெண் பிள்ளைகளான வாதியும், 2–ம் பிரதிவாதியும் எடுத்துச் சென்றுள்ளார்கள். அதுகுறித்து –1ம் பிரதிவாதி எந்த கேள்வியும் வாதி மற்றும் 2–ம் பிரதிவாதியிடம் கேட்கவில்லை. 1–ம் பிரதிவாதியின் பெற்றோர்கள் தாவா சொத்துக்களை வாக்கிறலாக தானம் கொடுத்தால் தான் அவர்களது கிரையம் மற்றும் மூல பத்திரங்களை 1–ம் பிரதிவாதி வசம் கொடுத்துள்ளார்கள். மேற்படி கிரையம் மற்றும் மூல பத்திரங்களை வைத்து, வாதி தாவா சொத்துக்களை அடமானம் வைத்து மீட்கவும் செய்துள்ளார். அப்போது வாதி எந்தவொரு ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை. எனவே, தாவா வழக்கு நிலைக்கத்தக்கதல்ல. தாவா சொத்துக்களில் வாதிக்கு எவ்வித உரிமையும் இல்லை என 1–ம் பிரதிவாதியால் எதிர்வழக்குரை செய்யப்பட்டுள்ளது.

**<u>4) 2–ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரைச் சுருக்கம்:–</u>**

i) வழக்கு நிலைக்கத்தக்கதல்ல. தாவா ஏ அட்டவணை சொத்துக்கள் சிலவற்றிற்கு 2–ம் பிரதிவாதியின் சம்மதமின்றி 1–ம் பிரதிவாதி பெயருக்கு பட்டா ஏற்பட்டுள்ளது. தாவா சொத்துக்களில் 2–ம் பிரதிவாதிக்கு 1/3 பாகம் உரிமையுள்ளது. எனவே, 2–ம் பிரதிவாதி கடந்த 15.07.2022–ம் தேதி வாதியுடன் சேர்ந்து தாவா சொத்துக்களில் 2–ம் பிரதிவாதிக்குரிய பாகத்தை பிரித்து தரக்கோரி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பட்டுள்ளது. மேற்படி அறிவிப்பை 1–ம் பிரதிவாதி பெற்றுக்கொள்ளாமல் திரும்ப அனுப்பியுள்ளார். எனவே, தாவா

சொத்துக்களில் 2–ம் பிரதிவாதிக்கு 1/3 பாகத்தை பிரித்து தரக்கோரி 2–ம் பிரதிவாதியால் தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5) மேற்கூறிய வழக்குரை, எதிர்வழக்குரை, மற்றும் ஆவணங்களிலிருந்தும், உபய தரப்பினர்களின் வாதங்களிலிருந்தும், இந்நீதிமன்றம் இவ்வழக்கில் தீர்வு காணும் பொருட்டு பின்வரும் எழுவினாக்களை வனைந்திருக்கிறது.

i) Whether the plaintiff is entitled 1/3 share in the suit property?

ii) Whether the plaintiff is entitled for permanent injunction as prayed for?

iii) What other relief of this plaintiff is entitled?

6) மேற்கூறிய எழுவினாக்களிலிருந்து, வாதியின் வழக்கை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு, வாதிகளுக்குத்தான் இருக்கிறது. அதனடிப்படையில், சாட்சி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. அதன்பேரில், வாதி தரப்பில், ஒரு சாட்சி விசாரணை செய்யப்பட்டு, ஆறு சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டிருக்கிறது. பிரதிவாதிகள் தரப்பில், இரண்டு சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, பனிரெண்டு சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டிருக்கிறது.

<u>7) ஒன்று முதல் மூன்று எழுவினாவிற்குரிய தீர்வு :–</u>

1. வாதிக்கு வழக்கிடைச் சொத்துக்களில் 1/3 பாகம் கிடைக்கத்தக்கதா?
2. வாதி கோரும் உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதா?

i) முதலாவதாக, வாதியின் வழக்கானது, தாவா ஏ மற்றும் பி அட்டவணை சொத்துக்கள் வாதியின் பெற்றோருக்கு பூர்வீக மற்றும் கிரைய பாத்தியப்பட்ட சொத்துக்களாகும். தாவா சி அட்டவணை சொத்தான நகைகள் வாதியின் தாயாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களாகும். எனவே, மேற்படி தாவா ஏ மற்றும் பி அட்டவணை சொத்துக்களில் வாதிக்கு 1/3 பாகம் உரிமையுள்ளது என்பதாகும். தாவா வழக்கில் வாதி வா.சா.1 ஆக சாட்சியம் அளித்தார். அவர் தன்னுடைய சாட்சியத்தில், தாவா பி அட்டவணை சொத்திற்கு வாதியின் தாயார் கருத்தம்மாள் பெயரில் உள்ள 10(1) சிட்டவை வா.சா.ஆ.1 ஆகவும், வாதியின் தாயார் கருத்தம்மாளின் இறப்பு சான்றிதழை வா.சா.ஆ.2 ஆகவும், வாதியின் தாயார் கருத்தம்மாளின் வாரிசு சான்றிதழின் கணினி நகல் வா.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்தார். இதுசம்பந்தமாக, 1-ம் பிரதிவாதி தரப்பில் மேற்படி கொடிவழி ஜாபிதா ஒப்புக்கொள்ளப்பட்டு இருக்கிறது. 2-ம் பிரதிவாதி தரப்பில், தாவா சொத்துக்களில் 2-ம் பிரதிவாதிக்கும் கூட்டுரிமையுள்ளது. தாவா சொத்தில் பாகம் கேட்டு வாதியுடன் சேர்ந்து 1-ம் பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார். தாவா சொத்துக்களில் 2-ம் பிரதிவாதிக்கும் 1/3 பாகம் உரிமையுள்ளது என்பதாகும்.

ii) அடுத்ததாக, 1-ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில், தாவா ஏ மற்றும் பி அட்டவணை சொத்துக்கள் வாதியின் பெற்றோருக்கு பாத்தியப்பட்டது என்பது ஒப்புக்கொள்ளப்பட்டு இருக்கிறது. வாதியின் பெற்றோர்கள் உயிருடன் இருக்கும் போது 1-ம்

பிரதிவாதிக்கு தாவா ஏ மற்றும் பி அட்டவணை சொத்துக்களை வாய்மொழியாக தானம் கொடுத்துவிட்டார். மேற்படி விபரம் வாதிக்கும், 2–ம் பிரதிவாதிக்கும் நன்கு தெரியும். தாவா சொத்துக்களின் அனுபவம் 1–ம் பிரதிவாதி வசம் உள்ளது. தாவா சி அட்டவணை சொத்தில் குறிப்பிடுவது போன்று நகைகள் எதுவும் இல்லை என்பதாகும். இதுசம்பந்தமாக, கற்றறிந்த 1–ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வாதியை குறுக்கு விசாரணை செய்யும் போது, வா.சா.1–ன் குறுக்கு விசாரணை சாட்சியமானது, **தாவா சொத்துக்கள் என் அப்பா மற்றும் அம்மா சொத்துக்கள் என்றால் சரிதான். 2000 ஆம் ஆண்டில் என் அப்பாவால் விவசாயம் செய்ய முடியாததால் பெண் பிள்ளைகளுக்கு சீர்வரிசை செய்து திருமணம் செய்துவிட்டதாலும், தாவா நிலங்களை என் அண்ணனிடம் வாய்மொழியாக தானமாக கொடுத்துவிட்டார் என்றால் அவ்வாறு எதுவும் கொடுக்கவில்லை** என 1–ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணையை கவனத்தில் கொள்ளும் போது, தாவா சொத்துக்கள் வாதியின் பெற்றோருக்கு பாத்தியப்பட்டது என ஒப்புக்கொண்டு தான் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளது. வாதிக்கு திருமணத்தின் போது சீர்வரிசைகள் செய்துவிட்டதாகவும், வாதியின் தகப்பனார் வாதியின் சகோதரரான 1–ம் பிரதிவாதிக்கு தாவா சொத்துக்களை வாய்மொழியாக தானம் கொடுத்துவிட்டார் என்பதாகும். ஆக, 1–ம் பிரதிவாதிக்கு தாவா சொத்துக்களை வாதியின் பெற்றோர்கள் வாய்மொழியாக தானம் கொடுத்ததை 1–ம் பிரதிவாதி தான் தெளிவுபடுத்த வேண்டும்.

iii) அடுத்ததாக, தாவா வழக்கில் 1–ம் பிரதிவாதி பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டார். அவர் தன்னுடைய நிரூபண வாக்குமூலத்தில், தாவா ஏ மற்றும் பி அட்டவணை சொத்துக்கள் பொன்னையாத்தேவர் மற்றும் கருத்தம்மாளுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்பதை ஒப்புக்கொண்டுள்ளார். தாவா சி அட்டவணை சொத்துக்களில் உரிமையில்லை என மறுத்துள்ளார். வாதியும், தாவா வழக்கிடை சி அட்டவணை சொத்துக்களைப் பொறுத்து வாதியின் பெற்றோர்கள் வாங்கியதாக வழக்குரையில் தெரிவித்துள்ளார். மேற்படி சி அட்டவணை சொத்திற்கு உரிய எந்த ஆவணமும் வாதி தாக்கல் செய்யவில்லை. தாவா சி அட்டவணை சொத்தானது, வாதியின் தாயாருக்கு பாத்தியப்பட்ட 24 சவரன் தங்க நகைகள் ஆகும். மேற்படி தங்க நகைகளை 1–ம் பிரதிவாதி மறுத்துள்ளார். அதனை வாதி தன்னுடைய சாட்சியத்தில் தெளிவுபடுத்தவில்லை. ஆக, தாவா ஏ மற்றும் பி அட்டவணை சொத்துக்களைப் பொறுத்து வாதியின் தாய் – தந்தையருக்கு பாத்தியப்பட்டது என்பதை 1–ம் பிரதிவாதியும் ஒப்புக்கொண்டு இருக்கிறார். மேலும், வாதி வழக்கிடைச் சொத்தில் அனுபவத்தில் இல்லை. வாதிக்கு சீர்வரிசைகள் செய்து திருமணம் செய்து வைப்பட்டது. அதனால், வாதி கூட்டுக்குடும்ப அந்தஸ்தை இழந்துவிட்டார் என 1–ம் பிரதிவாதி தரப்பில் வாதிடுவது ஏற்புடையது அல்ல. வாதி தாவா சொத்துக்களில் தனக்குரிய பங்கை கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியிருக்கிறார். தாவா சொத்திற்கு வாதியின் பெற்றோர்கள் பெயரில் உள்ள அசல் ஆவணங்களை

பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.4 1–ம் பிரதிவாதியிடம் இருப்பதால் வாதிக்கு தாவா சொத்தில் உரிமையில்லை என தீர்மானிக்க முடியாது. 1–ம் பிரதிவாதி குடும்பத்தில் மூத்தவர் ஆவார். தாவா சொத்துகளை 1–ம் பிரதிவாதி அடமானம் வைத்திருக்கிறார் என்பதற்காக, தாவா சொத்தில் வாதி அனுபவத்தில் இல்லை என தீர்மானிக்கவும் முடியாது. எனவே, வாதிக்கு தாவா சொத்துக்களில் 1/3 பாகமும், 1, 2 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்துக்களில் தலா 1/3 பாகமும் உரிமையுள்ளது. 1–ம் பிரதிவாதியின் பாகத்தைப் பொறுத்து தான் 1–ம் பிரதிவாதி அடமானம் வைக்க முடியும். ஆகவே, தபசில் சொத்துக்களில் வாதி அனுபவத்தில் இல்லை என கூறுவது ஏற்புடையதாக இல்லை.

iv) அடுத்ததாக, 1–ம் பிரதிவாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளித்த பி.வா.சா.2 தன்னுடைய சாட்சியத்தில் 1–ம் பிரதிவாதியின் பெற்றோர்கள் 1–ம் பிரதிவாதிக்கு தானம் கொடுத்தது எதுவும் தனக்கு நேரடியாக தெரியாது என சாட்சியம் அளித்திருக்கிறார். ஆக, வாய்மொழி தானம் 1–ம் பிரதிவாதிக்கு கொடுக்கும் போது சாட்சிகள் யாரும் உடன் இல்லை. ஆகையால், 1–ம் பிரதிவாதிக்கு தாவா சொத்துக்களை வாதியின் தகப்பனார் வாய்மொழி பாகம் கொடுத்ததை 1–ம் பிரதிவாதி நிரூபிக்கவில்லை. எனவே, வழக்கிடை ஏ மற்றும் பி அட்டவணை சொத்துக்களில் வாதிக்கு 1/3 பாகம் கிடைக்கத்தக்கது என்றும், தாவா சி அட்டவணை சொத்தைப் பொறுத்து வாதிக்கு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என எழுவினாக்கள் 1 மற்றும் 2 தீர்மானிக்கப்படுகிறது.

**<u>8) மூன்றாவது எழுவினாவிற்குரிய தீர்வு:-</u>**

வாதிக்கு கிடைக்கக்கூடிய வேறு பரிகாரங்கள் என்ன? என்பது குறித்து பார்க்கும்பொழுது, வழக்கிடைச் சொத்துக்களில் வாதிக்கு 1/3 பாகம் பிரித்து கொடுப்பதற்கு ஒரு முதல்நிலை தீர்ப்பாணை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என தீர்மானித்து, வாதியின் வழக்கு செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து, அவ்வாறே இந்த எழுவினாவிற்கும் தீர்வு காணப்படுகிறது.

இறுதியாக, வாதியின் வழக்கு செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்பட்டு, வழக்கிடை ஏ மற்றும் பி அட்டவணை சொத்துக்களில் வாதிக்கு 1/3 பாகமும், 1-ம் பிரதிவாதிக்கு 1/3 பாகமும், 2-ம் பிரதிவாதிக்கு 1/3 பாகமும் பிரித்துக் கொடுக்க முதல்நிலை தீர்ப்பாணை பரிகாரம் வழங்கியும், தாவா சி அட்டவணை சொத்தைப் பொறுத்து தள்ளுபடி செய்தும் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை, என்னால், சுருக்கெழுத்து - தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்து பார்த்து, பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2026-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 09-ம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.04.09 15:28:14 +0530

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி

**<u>1) வாதி தரப்பு சாட்சி:-</u>**

வா.சா.1 - திருமதி. மணிமேகலை **(வாதி)**

**<u>2) வாதி தரப்பு சான்றாவணங்கள்:—</u>**

| | | | |
|---|---|---|---|
| 1) | வா.சா.ஆ.1 | 07.09.2022 | தாவா பி அட்டவணையைப் பொறுத்து வாதியின் தாயார் கருத்தம்மாள் பெயரிலுள்ள 10(1) சிட்டா |
| 2) | வா.சா.ஆ.2 | 07.09.2022 | வாதியின் தாயார் கருத்தம்மாளின் இறப்புச் சான்றிதழின் கணினி நகல் |
| 3) | வா.சா.ஆ.3 | 31.05.2021 | வாதியின் தாயார் கருத்தம்மாளின் வாரிசு சான்றிதழின் கணினி நகல் |
| 4) | வா.சா.ஆ.4 | 17.09.2022 | 1—ம் பிரதிவாதி வீரணன் பெயரிலுள்ள 10(1) சிட்டா மற்றும் அடங்கல் பதிவேட்டு நகல் |
| 5) | வா.சா.ஆ.5 | 15.09.2022 | 1—ம் பிரதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் |
| 6) | வா.சா.ஆ.6 | --- | வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை 1—ம் பிரதிவாதி திரும்பி அனுப்பியதற்கான ரிட்டர்ன் கவர் அசல் |

**<u>3) பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் :—</u>**

பி.வா.சா.1 — திரு.வீரணன் **(1—ம் பிரதிவாதி)**
பி.வா.சா.2 — திரு.ராசு **(3—ம் தரப்பினர்)**

**<u>4) பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:—</u>**

| | | | |
|---|---|---|---|
| 1) | பி.வா.சா.ஆ.1 | 03.09.1969 | பொன்னாங்கள் பெயரில் உள்ள மூல கிரையப்பத்திரத்தின் அசல் |
| 2) | பி.வா.சா.ஆ.2 | 24.09.1976 | 1—ம் பிரதிவாதியின் தந்தை பொன்னையாத்தேவர் பெயரில் உள்ள |

| | | | |
|---|---|---|---|
| | | | கிரைய பத்திரத்தின் அசல் |
| 3) | பி.வா.சா.ஆ.3 | 29.04.1978 | 1–ம் பிரதிவாதியின் தாயார் கருத்தம்மாள் பெயரில் உள்ள கிரைய பத்திரத்தின் அசல் |
| 4) | பி.வா.சா.ஆ.4 | 14.09.1978 | வீரணத்தேவர் பெயரிலுள்ள மூல கிரையப்பத்திரத்தின் அசல் |
| 5) | பி.வா.சா.ஆ.5 | 08.09.2008 | 1–ம் பிரதிவாதி கூட்டுறவு வங்கியில் அடமானம் வைத்ததற்கான அடமான கடன் பத்திரத்தின் அசல் |
| 6) | பி.வா.சா.ஆ.6 | 23.07.2007 | 1–ம் பிரதிவாதியின் தந்தை பெயரிலுள்ள கணினி சிட்டா அசல் |
| 7) | பி.வா.சா.ஆ.7 | 26.01.1996 | 1–ம் பிரதிவாதியின் தாயார் கருத்தம்மாள் பெயரிலுள்ள பட்டா புத்தகம் அசல் |
| 8) | பி.வா.சா.ஆ.8 | 26.01.1996 | 1–ம் பிரதிவாதியின் தந்தை பொன்னையா பெயரிலுள்ள பட்டா புத்தகம் அசல் |
| 9) | பி.வா.சா.ஆ.9 | 21.01.2005 | 1–ம் பிரதிவாதி வங்கிக்கு அனுப்பிய கடித அசல் |
| 10) | பி.வா.சா.ஆ.10 | 03.10.2011 | செல் ரசீது அசல் |
| 11) | பி.வா.சா.ஆ.11 | 04.04.2024 | 1–ம் பிரதிவாதி பெயரிலுள்ள கணினி சிட்டா அசல் |
| 12) | பி.வா.சா.ஆ.12 | 04.04.2024 | 1–ம் பிரதிவாதி பெயரிலுள்ள கணினி சிட்டா அசல் |

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.04.09 15:28:26 +0530

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி

சார்பு நீதிமன்றம்,
உசிலம்பட்டி.

09.04.2026

ஓ.எஸ்.எண்.228/2022

சீரான /வரைவு /தீர்ப்புரை